# ஒன்றிணைந்து, மேலும் வலிமையுடன் மீண்டெழுதல்



BUDGET
2021




“நாம் ஒன்றிணைந்து, எதிர்காலத் தலைமுறைகளுக்காகப் புத்தாக்கத்திற்கு உகந்த விறுவிறுப்பான பொருளியலையும், அனைவரையும் உள்ளடக்கிய பரிவுமிக்க சமுதாயத்தையும், பசுமையான, நீடித்து நிலைத்திருக்கவல்ல நகரையும் உருவாக்குவோம்.”

அன்பார்ந்த சக சிங்கப்பூரர்களே

இந்தக் கிருமிப்பரவல் நம்மை வீழ்த்த, நாம் அனுமதிக்கமாட்டோம். நாம் அனைவரும் ஒரு பொருளாதாரமாக, ஒரு சமுதாயமாக, ஓர் இல்லமாக, ஒரே மக்களாக மேலும் வலிமையுடன் மீண்டெழவேண்டும்.

ஒன்றிணைந்து மேலும் வலிமையுடன் மீண்டெழுவதற்கான $107 பில்லியன் வரவுசெலவுத் திட்டமானது, 2021-ஆம் ஆண்டில், நாம் இந்த நெருக்கடிநிலையைத் தொடர்ந்து எவ்வாறு சமாளிப்போம் என்பது பற்றியதாகும். இந்த வரவுசெலவுத் திட்டம் உங்கள் அனைவருக்கும் ஆதரவளிக்கும் - நம் ஊழியர்கள், தொழில்கள், குடும்பங்கள் ஆகிய அனைத்தும் இந்தச் சிரமமான காலகட்டத்தைக் கடந்துசெல்ல துணைபுரிந்து, உங்கள் எதிர்காலத்திலும் முதலீடு செய்யும்.

நல்ல வேலைகளை உருவாக்கித் தரவும், வேலை கிடைப்பதற்கு முன், கூடுதல் ஆதரவு தேவைப்படுவோருக்கு உதவி புரியவும், நாங்கள் இருமடங்கு முயற்சி எடுப்போம். குடும்பங்களுக்கான ஆதரவுத் தொகுப்புத்திட்டம், நம் குடும்பங்களுக்குக் கூடுதல் ஆதரவளிக்கும். இந்தத் திட்டங்களும் 2020-ஆம் ஆண்டில் நடப்புக்கு வந்த வழக்கத்திற்கு மாறான ஆதரவுத் திட்டங்களும் உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் உதவியாக இருக்கும் என நான் நம்புகிறேன்.

இந்த வரவுசெலவுத் திட்டம் எதிர்காலத்திற்கான முதலீடு பற்றியதும் ஆகும். ஒன்றிணைந்து, நாம் துடிப்பும் புத்தாக்கமும் மிகுந்த பொருளியலையும், அனைவரையும் உள்ளடக்கும் கனிவு மிகுந்த சமுதாயத்தையும், பசுமையான, நீடித்து நிலைக்கத்தக்க நகரையும் எதிர்காலத் தலைமுறைகளுக்காக உருவாக்குவோம்.

நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் ஆதரவாக இருந்து, நம் இல்லத்தையும் அன்புக்குரியவர்களையும் கவனித்துக்கொள்ள கூடுதல் முயற்சி எடுக்கவேண்டும். நாம் கொவிட்-19 கிருமிப்பரவலை எதிர்கொள்வோம்; ஒன்றிணைந்து மேலும் வலிமையுடன் மீண்டெழுவோம்.

**ஹெங் சுவீ கியாட்**
**துணைப் பிரதமர்,**
**பொருளியல் கொள்கைகளுக்கான ஒருங்கிணைப்பு அமைச்சர்,**
**நிதி அமைச்சர்**

# முன்னோ திட்ட



## திறன்பெற்ற ஊழியர்களும் புத்தாக்கம் மிக்க தொழில்களும்


→ நமது தொழில்களுக்கு ஆதரவளித்தல்
பக்கம் 5 - 9

→ நமது ஊழியர்களுக்கும் வேலை தேடுவோருக்கும் ஆதரவளித்தல்
பக்கம் 10 - 14

# க்குத்
# ங்கள்

BUDGET 2021

## நமது சமூக இணக்கத்தை வலுப்படுத்துதல்

→ நமது குடும்பங்களுக்கு ஆதரவளித்தல்
பக்கம் 15 - 17

→ ஒருவருக்கொருவர் ஆதரவளித்தல்
பக்கம் 18 - 19

## எதிர்காலத் தலைமுறைகளுக்காக நீடித்து நிலைத்திருக்கவல்ல இல்லத்தை உருவாக்குதல்

→ நீடித்த நிலைத்தன்மை
பக்கம் 20 - 22



# நமது தொழில்களுக்கு ஆதரவளித்தல்

# நமது தொழில்களுக்கு ஆதரவளித்தல்

BUDGET 2021

## அதிக வளர்ச்சி உடைய தொழில்நிறுவனங்களுக்கு

- தொழில்நிறுவன நிதி ஆதரவுத் திட்டம்- புதுத் தொழில் கடன் திட்டம் மேம்படுத்தப்பட்டு, நீட்டிக்கப்படும்
    - கடன் தொகை வரம்பு $5 மில்லியனிலிருந்து $8 மில்லியனாக உயர்த்தப்படும்
    - அடுத்த ஓராண்டில், சுமார் $45 மில்லியன் மதிப்புள்ள புதுத் தொழில் கடன்களின் பலன்களைக் காணமுடியும் என எதிர்பார்க்கிறோம்



# நமது தொழில்களுக்கு ஆதரவளித்தல்

BUDGET 2021

## முதிர்ச்சியடைந்த தொழில்நிறுவனங்களுக்கு:

- புதிய **வளரும் தொழில்நுட்பத்திற்கான திட்டம்,** 5G, செயற்கை நுண்ணறிவு, நம்பகமான தொழில்நுட்பங்கள் போன்ற புத்தாக்கத் தொழில்நுட்பங்களைச் சோதித்து அமலாக்கும் செலவுகளுக்கு இணை நிதி அளிக்கும்
- **தலைமைத் தொழில்நுட்ப அதிகாரியின் சேவை,** நிறுவனங்களுக்கு நிபுணத்துவ தகவல் தொழில்நுட்ப ஆலோசனை சேவைகளை வழங்கும்
- **மின்னிலக்கத் தலைவர்கள் திட்டம்,** நம்பிக்கையளிக்கும் நிறுவனங்கள், பிரதான மின்னிலக்கக் குழுவினரை வேலைக்குச் சேர்த்துக்கொள்ளவும், மின்னிலக்க உருமாற்ற வரைவுத் திட்டத்தை வகுத்து செயல்படுத்தவும் உதவும்
- தொழில் நிறுவனங்கள் **புத்தாக்கத்துடன் செயல்பட, உருமாற்றம் காண, விரிவாக்கம் அடைய** தொடர் ஆதரவு
  - ஸ்கேல் அப் எஸ்ஜி திட்டம், உற்பத்தித்திறன் தீர்வுகள் மானியம், சந்தை ஆயத்தநிலை உதவி, தொழில் நிறுவன மேம்பாட்டு மானியம் போன்ற தொழில் நிறுவனத் திட்டங்களுக்கு வழங்கப்படும் **80% வரையிலான மேம்படுத்தப்பட்ட ஆதரவு,** 2021 செப்டம்பர் இறுதியிலிருந்து 2022 மார்ச் இறுதி வரை நீட்டிக்கப்படும்





## பெரிய உள்ளூர் தொழில்நிறுவனங்களுக்கு

- பெரிய உள்ளூர் தொழில்நிறுவனங்கள் அடுத்த கட்ட வளர்ச்சியை அடைய, $1 பில்லியன் பெறுமானமுள்ள **உள்ளூர் தொழில்நிறுவனங்களுக்கான நிதித் திட்டத்தில்** தெமாசெக் நிறுவனத்துடன் **$500 மில்லியன்** இணை முதலீடு

## மதிப்புத் தொடர்களை உருமாற்றிட

- (மனிதனால்) உருவாக்கப்பட்ட சுற்றுச்சூழல் துறைக்காக **வளர்ச்சி, உருமாற்றத் திட்டம்**
  - இந்தத் துறை மீட்சி அடையும் வேளையில், உருமாற்றத்தையும் புத்தாக்கத்தையும் தூண்ட, கட்டட மேம்பாட்டாளர்கள், ஆலோசகர்கள், குத்தகையாளர்கள், விநியோகிப்பாளர்கள் ஒன்று திரட்டப்படுவார்கள்

# நமது தொழில்களுக்கு ஆதரவளித்தல்

BUDGET 2021

## புத்தாக்க சிந்தனைகளை வளர்ப்பதற்கான தளங்களை உருவாக்குதல்

- நிறுவனங்கள் புதிய தொழில் முனைப்புகளில் மேம்பாடு காண இணை நிதி வழங்கும் **நிறுவனப் புத்தாக்கத் திட்டம்** முன்னோட்டமாகத் தொடங்கப்படும்
- நிறுவனங்களும் பொது அமைப்புகளும் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தகுந்த தீர்வு வழங்குநர்களைப் பரிந்துரைக்க, **புத்தாக்கத்திற்கான பொதுத் தளம்** மேம்படுத்தப்படும்; முன்வடிவத் தயாரிப்புக்கும் தீர்வுகளின் அமலாக்கத்திற்கும் இணை நிதி வழங்கப்படும்
- சிங்கப்பூருக்கும் உலகிலுள்ள முக்கிய புத்தாக்க மையங்களுக்கும் இடையிலான எல்லைகடந்த ஒத்துழைப்புக்கு வழிகோல, **உலகளாவிய புத்தாக்கக் கூட்டணி** மேம்படுத்தப்படும்
    - தற்போது 15 நகரங்களுடன் நிலவும் தொடர்புகள், அடுத்த 5 ஆண்டுகளில் உலகெங்கிலும் **25க்கும் மேற்பட்ட நகரங்களுக்கு** விரிவுபடுத்தப்படும்
- **சிங்கப்பூர் மதிநுட்பச் சொத்து உத்திமுறை 2030,** தொழில்கள் தங்களது மதிநுட்பச் சொத்துகளையும் தொட்டுணர முடியாத சொத்துகளையும் மதிப்பிட்டு வணிகமயமாக்குவதற்குத் தேவையான கருவிகளை வழங்கும்; இந்தத் துறைகளில் திறன்பெற்ற நிபுணர்களுக்குப் பயிற்சி அளிக்கும்

# நமது ஊழியர்களுக்கும் வேலை தேடுவோருக்கும் ஆதரவளித்தல்



BUDGET 2021

# வேலை ஆதரவுத் திட்டம்

- பிரிவு 1 துறைகளுக்கு (விமானத்துறை, விண்வெளித்துறை, பயணத்துறை) ஆதரவு நீட்டிக்கப்படும்
  - ஏப்ரல் முதல் ஜூன் 2021 வரை கொடுக்கப்படும் சம்பளங்களுக்கு 30% ஆதரவு; ஜூலை முதல் செப்டம்பர் 2021 வரை கொடுக்கப்படும் சம்பளங்களுக்கு 10% ஆதரவு
- பிரிவு 2 துறைகளுக்கு (சில்லறை விற்பனை, கலை, கலாசாரம், உணவுச் சேவைகள், மனிதனால் உருவாக்கப்பட்ட சுற்றுச்சூழல்) ஆதரவு நீட்டிக்கப்படும்
  - ஏப்ரல் முதல் ஜூன் 2021 வரை கொடுக்கப்படும் சம்பளங்களுக்கு 10% ஆதரவு
- முன்னதாக அறிவித்தபடி, மற்ற துறைகளைச் சேர்ந்த நிறுவனங்களுக்கு மார்ச் 2021 வரை ஆதரவு தொடரும்





# கொவிட்-19 மீட்சி மானியம்

- வேலைகளை இழந்த அல்லது அதிகளவு சம்பளக் குறைப்புக்கு ஆளான ஊழியர்களுக்கு ஆதரவளித்தல்
    - தொடர்ச்சியாகக் குறைந்தது 3 மாதங்களுக்கு வேலைகளை இழந்த அல்லது தன்விருப்பமின்றிச் சம்பளமில்லா விடுப்பில் வைக்கப்பட்ட ஊழியர்களுக்கு, மாதந்தோறும் **$700** வரை கிடைக்கும் (3 மாதங்களுக்கு)
    - தொடர்ச்சியாகக் குறைந்தது 3 மாதங்களுக்குக் குறைந்தபட்சம் 50% சராசரி வருமான இழப்புக்கு உள்ளான ஊழியர்களுக்கும் சுயதொழில் புரிவோருக்கும், மாதந்தோறும் **$500** வரை கிடைக்கும் (3 மாதங்களுக்கு)

BUDGET 2021

## விமானப் போக்குவரத்துத் துறைக்கு

- விமானப் போக்குவரத்துத் துறையின் முக்கிய ஆற்றல்களைக் கட்டிக்காக்கவும் செலவு நிவாரண உதவியை நீட்டிக்கவும் $870 மில்லியன்

## நிலப் போக்குவரத்துத் துறைக்கு

- டாக்ஸி, தனியார் வாடகை வாகன ஓட்டுநர்களுக்கு **கொவிட்-19 ஓட்டுநர் நிவாரண நிதி**
  - ஜனவரி முதல் மார்ச் 2021 வரை, ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு வாகனத்திற்கும் $600; ஏப்ரல் முதல் ஜூன் 2021 வரை, மாதந்தோறும் $450

## கலை-கலாசார, விளையாட்டுத் துறைகளுக்கு

- கலை-கலாசார, விளையாட்டுத் துறைகளைச் சேர்ந்த தொழில்களுக்கும் சுயதொழில் புரிவோருக்கும் ஆதரவளிக்க, $45 மில்லியன் மதிப்புள்ள கலை-கலாசார, விளையாட்டுத் துறைகளுக்கான மீட்சித் தொகுப்புத்திட்டங்கள்



# எஸ்ஜி ஒற்றுமை இயக்கத்தின் வேலைகள், திறன்களுக்கான தொகுப்புத்திட்டம்

- எஸ்ஜி ஒற்றுமை இயக்கத்தின் வேலைகள், திறன்களுக்கான தொகுப்புத்திட்டத்தின் இரண்டாம் பகுதிக்கு $5.4 பில்லியன்
  - இது கடந்த ஆண்டில், ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட $3 பில்லியனுக்கு அப்பாற்பட்டது
  - இதில் $5.2 பில்லியன், வேலை உருவாக்கத்திற்கான ஊக்குவிப்புத் திட்டத்தின் தகுதிபெறும் கால வரம்பை 2021 செப்டம்பர் இறுதி வரை நீட்டிப்பதற்காகப் பயன்படும். இவ்வாறு, அது ஆட்சேர்ப்பைத் தொடர்ந்து அதிகரிக்க முதலாளிகளை ஊக்குவிக்கும்
- எஸ்ஜி ஒற்றுமை இயக்கத்தின் திறன் பயிற்சித் திட்டம், எஸ்ஜி ஒற்றுமை இயக்கத்தின் வேலைப் பயிற்சித் திட்டம், பணியிடைக்கால வாழ்க்கைத்தொழில் பாதைகளுக்கான திட்டம் ஆகியவை நீட்டிக்கப்படும்
- அடுத்த கட்டத்திற்கு ஒதுக்கப்படும் இந்த நிதி, வேலை உருவாக்கத்திற்கான ஊக்குவிப்புத் திட்டத்தின் வழி 200,000 சிங்கப்பூரர்களை வேலையில் அமர்த்த ஆதரவளிக்கும்; வேலை தேடுவோரின் திறன்களை மேம்படுத்தி, அவர்கள் வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்குத் தொடர்ந்து ஆதரவளிக்க, 35,000 வரையிலான வேலைப் பயிற்சிகளையும் பயிற்சிக்கான வாய்ப்புகளையும் வழங்கும்



# நமது
# குடும்பங்களுக்கு
# ஆதரவளித்தல்



# நமது குடும்பங்களுக்கு ஆதரவளித்தல்

BUDGET 2021

## குடும்பங்களுக்கான ஆதரவுத் தொகுப்புத்திட்டம்

- தகுதிபெறும் சிங்கப்பூரர்கள் அனைவருக்கும் ஒரு முறை மட்டுமே கூடுதலாக வழங்கப்படும் $200 மதிப்புள்ள பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு-ரொக்கம் (சிறப்புத் தொகை)
- தகுதிபெறும் வீவக வீடுகளுக்கு, $120 முதல் $200 வரையிலான பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு-யு-சேவ் (சிறப்புத் தொகை)
- தகுதிபெறும் அனைத்து குடும்பங்களுக்கும் சேவை, பராமரிப்புக் கட்டணத் தள்ளுபடி மேலும் ஓராண்டுக்கு நீட்டிக்கப்பட்டு, 1.5 முதல் 3.5 மாதங்கள் வரையிலான கட்டணங்கள் ஈடு செய்யப்படும்
- 21 வயதுக்குக் குறைவான பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்களுக்கு, பிள்ளை மேம்பாட்டுக் கணக்கு, எடுசேவ் கல்விச் சேமிப்புக் கணக்கு, அல்லது உயர்நிலைக் கல்விக்குப் பிந்திய கல்விக்கான கணக்கில், சிங்கப்பூர்ப் பிள்ளை ஒவ்வொருவருக்கும், ஒரு முறை மட்டுமே கூடுதலாக வழங்கப்படும் $200 நிரப்புத் தொகை
- ஒவ்வொரு சிங்கப்பூர் குடும்பத்திற்கும், பங்கேற்கும் குடியிருப்பு வட்டாரக் கடைகள், உணவங்காடி நிலையங்கள் ஆகியவற்றில் பயன்படுத்துவதற்காக $100 மதிப்புள்ள சமூக மேம்பாட்டு மன்றப் பற்றுச்சீட்டுகள்





## மூத்த ஊழியர்கள்

- மூத்த ஊழியர்களின் பணி ஓய்வுபெறும் வயதை முன்கூட்டியே அதிகரிக்கும் நிறுவனங்களுக்கான மானியம், பகுதிநேர மறுவேலை நியமன மானியம் ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடு $200 மில்லியனுக்கு மேலாக உயர்த்தப்படுகிறது. மேலும் அதிகமான நிறுவனங்கள் தங்கள் ஓய்வுக்கால வயதையும் மறுவேலை நியமன வயதையும் முன்கூட்டியே உயர்த்துவதற்கு இது ஆதரவளிக்கும்

## குறைந்த வருமானக் குடும்பங்கள்

- வாடகை வீடுகளில் வசிக்கும் குறைந்த வருமானக் குடும்பங்களுக்கு முழுமையான ஆதரவு வழங்க, சமூகத் தொடர்புக் கட்டமைப்பு அடுத்த 2 ஆண்டுகளில் நாடளாவிய திட்டமாக விரிவாக்கப்படும். இதன்மூலம், பிள்ளைகள் கொண்ட 14,000 குடும்பங்கள் பயன்பெறும்

## சிறப்புத் தேவைகள் உடைய பிள்ளைகள்

- வளர்ச்சித் தேவைகள் கொண்ட மேலும் பல பிள்ளைகள் மற்ற பிள்ளைகளுடன் சேர்ந்து அர்த்தமுள்ள வகையில் வளர்ச்சியடையத் துணைபுரியும் அனைத்து மாணவர்களையும் உள்ளடக்கிய முன்னோடி ஆதரவுத் திட்டம்



# ஒருவருக்கொருவர் ஆதரவளித்தல்

# ஒருவருக்கொருவர் ஆதரவளித்தல்

## அறக்கொடை

- அங்கீகாரம் பெற்ற பொதுநல அறக்கொடை அமைப்புகளுக்கு வழங்கப்படும் நன்கொடைகளுக்குக் கிடைக்கும் 250% வரிக்கழிவு, 2023 இறுதி வரை மேலும் ஈராண்டுகளுக்கு நீட்டிக்கப்படும்
- சிங்கப்பூர் பந்தயப்பிடிப்புக் கழகத்தின் மேம்படுத்தப்பட்ட நிதி திரட்டும் திட்டத்திற்கான அரசாங்கத்தின் கூடுதல் ஆதரவு, ஓராண்டுக்கு நீட்டிக்கப்பட்டு, தகுதிபெறும் நன்கொடைகளுக்கு வெள்ளிக்கு வெள்ளி இணைத்தொகை வழங்கப்படும்
- சமூக உண்டியலின் ஒன்றிணைந்து பகிர்ந்துகொள்வதற்கான "ஷேர்" திட்டத்தின் இணை மானியம், 2023 நிதியாண்டு வரை நீட்டிக்கப்படும்
- தொழில்கள் அன்றாட அறக்கொடைக்குத் தூண்டுகோலாகத் திகழ, அறக்கொடைக்கான மாற்றத்தை ஊக்குவிக்கும் மானியத்திற்கு $20 மில்லியன்

## தொண்டூழியம்

- நிறுவனத் தொண்டூழியத்தை ஆதரிக்கும் வகையில், தொழில்களுக்கும் அங்கீகாரம் பெற்ற பொதுநல அறக்கொடை அமைப்புகளுக்கும் இடையிலான பங்காளித்துவத் திட்டம், 2023 இறுதி வரை ஈராண்டுகளுக்கு நீட்டிக்கப்படும்
- சமூக மேம்பாட்டு மன்றங்களின் $50 மில்லியன் பராமரிப்பு, புத்தாக்க நிதி, சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றும் அடித்தள, புத்தாக்கம் நிறைந்த திட்டங்களுக்கு ஆதரவளிக்கும்





# நீடித்த நிலைத்தன்மை

# தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்

- வேளாண்-உணவுத் துறையில் தொழில்நுட்பப் பயன்பாட்டுக்குத் தொடர்ந்து ஆதரவளிக்க, $60 மில்லியன் மதிப்புள்ள வேளாண்-உணவுக் குழும உருமாற்ற நிதி
- தனியார் கட்டடங்களில் மின்னேற்றும் வசதிகளை மேம்படுத்துதல் போன்ற மின்சார வாகனங்கள் தொடர்பான திட்டங்களுக்கு, அடுத்த 5 ஆண்டுகளில் $30 மில்லியன் ஒதுக்கப்படும்
- மின்சார வாகனங்களுக்கும் உள்-எரிப்பு இயந்திரமுள்ள வாகனங்களுக்கும் இடையிலான விலை வேறுபாட்டைக் குறைத்தல்
    - மின்சார வாகனங்களின் கூடுதல் பதிவுக் கட்டணம் ஜனவரி 2022 முதல் டிசம்பர் 2023 வரை பூஜ்ஜியத்திற்குக் குறைக்கப்படும்
    - பொதுச் சந்தை மின்சார வாகனங்களின் சாலை வரி, உள்-எரிப்பு இயந்திரமுள்ள வாகனங்களுக்கு நிகராக இருக்கும் வகையில் சாலை வரிப் பிரிவுகள் மாற்றப்படும்





BUDGET 2021

## பசுமை நிதியளிப்பு

- நீடித்த நிலைத்தன்மை சார்ந்த முயற்சிகளுக்குத் துணைபுரிய, பசுமை நிதி மிகவும் முக்கியம்
- அரசாங்கம், தேர்ந்தெடுக்கப்பட்ட பொது உள்கட்டமைப்புத் திட்டப்பணிகளில் பசுமைப் பத்திரங்களை வழங்கும்
- சிங்கப்பூரிலும் ஆசியாவிலும் நீடித்த நிலைத்தன்மை சார்ந்த மேம்பாடுகளுக்கான மூலதனம் கிடைப்பதற்குத் தூண்டுகோலாகச் செயல்படும்
- இதற்கு தொடக்கமாக, **$19 பில்லியன்** வரை பெறுமானமுள்ள பொதுத் துறை பசுமைத் திட்டப்பணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன

MINISTRY OF FINANCE
SINGAPORE

16 பிப்ரவரி 2021 நிலவரப்படி